# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2020–2021

### மானியக் கோரிக்கை எண். 9


**சீ. வளர்மதி**

பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2020

# பொருளடக்கம்


| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | இடஒதுக்கீடு | 5 |
| 3. | கல்வி | 8 |
| 4. | விடுதிகள் | 9 |
| 5. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம் | 18 |
| 6. | மாநில அளவில் சிறந்த மூன்று விடுதிகளுக்கும், பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்குதல் | 19 |
| 7. | விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல் | 20 |
| 8. | விடுதி கட்டடங்கள் பராமரிப்பு | 22 |
| 9. | கல்வி உதவித்தொகைத் திட்டங்கள் | 22 |
| 10. | இலவசக் கல்வி | 27 |
| 11. | பட்டியலிடப்பட்ட மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை திட்டம் | 33 |
| 12. | மிகப்பிற்டுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சாாந்த கிராமப்புற மாணவிகளுக்கு ஊக்கத் தொகை வழங்குதல் | 36 |

| வரிசை எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 13. | கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் | 37 |
| 14. | சீருடைகள் | 41 |
| 15. | மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் | 43 |
| 16. | பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் | 44 |
| 17. | சீர்மரபினர் நல வாரியம் | 46 |
| 18. | தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் | 49 |
| 19. | சமூக நீதிக்கான பெரியார் விருது | 53 |
| 20. | தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக் கொடைகள் நிருவாகக் குழுமம் | 54 |
| 21. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 56 |
| 22. | தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 63 |
| 23. | சிறுபான்மையினர் நலன் | 64 |
| 24. | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 84 |
| 25. | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் | 85 |
| 26. | தமிழ்நாடு வக்ஃப் வாரியம் | 92 |
| 27. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 96 |
| 28. | இணைப்புகள் | 103 |
| 29. | புகைப்படங்கள் | 106 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

## கொள்கை விளக்கக் குறிப்பு

## 2020–2021

**முன்னுரை**

தமிழ்நாடு, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்குப் பாடுபடுவதில் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இம்மாநிலம், அவர்களின் சமூக மேம்பாட்டிற்கும், கல்வி முன்னேற்றதிற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், நலவாழ்விற்கும் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துகிறது. இப்பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகைகள் வழங்குதல், விடுதி வசதிகள் ஏற்படுத்தி தருதல், மிதிவண்டிகள் வழங்குதல், ஊக்கத் தொகை வழங்குதல், பிரமலைக் கள்ளர் இனத்தவர் மேம்பாட்டிற்காக கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் நடத்துதல் உள்ளிட்ட திட்டங்கள் இத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் சுயதொழில் துவங்க கடனுதவி வழங்குதல், பொருளாதார மேம்பாட்டிற்காக சலவைப் பெட்டிகள், தையல் இயந்திரங்கள் வழங்குதல், விலையேதுமின்றி வீட்டுமனைகள் வழங்குதல், உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல், ஜெருசலேம் புனிதப் பயணம் மேற்கொள்ள நிதி உதவி வழங்குதல், ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் நிதி உதவி அளித்தல் ஆகிய பல்வேறு திட்டங்கள் இத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சீர்மரபினர் நல வாரியம், தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் ஆகிய நல வாரியங்கள் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. இந்த வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு நல உதவிகள் வழங்கப்படுகின்றன. வக்ஃப் சொத்துக்களை பராமரிப்பதற்காகவும், பாதுகாப்பதற்காகவும் மற்றும் வக்ஃப்புகளை சரியான முறையில் நிர்வகிப்பதற்காகவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியம் செயல்பட்டு வருகிறது. மாநிலத்திலுள்ள வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தினைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு

நிர்வகிக்கப்படும் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகளையும் நிலைக்கொடைகளையும் பாதுகாப்பதற்கும், பேணி வருவதற்கும் என "2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணி வருதல்) சட்டம்" (தமிழ்நாடு சட்டம் 44/2018) இயற்றப்பட்டு, இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் நிருவாகக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது.

**நீடித்த வளர்ச்சி இலக்குகள்**

2015 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25–27 ஆகிய நாட்களில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் உச்சி மாநாட்டில் "நமது உலகத்தை மாற்றியமைத்தல்: நீடித்த வளர்ச்சிக்கான 2030 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்" 17 இலக்குகள் மற்றும் அதனோடு தொடர்புடைய 169 குறிக்கோள்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது. "யாவரும் விடுபடாமை" என்ற மைய நோக்கத்தை கொண்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இத்துறையுடன் நேரடி தொடர்புடையதாகும். நீடித்த வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்கான முறைகளையும், அமைப்பையும் ஏற்படுத்த அரசாணை (நிலை) எண். 81, நாள். 27.12.2019–ன்படி

நீடித்த வளர்ச்சி இலக்குகள் அலகு, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் கூடுதல் செயலர் இவ்வலகின் தலைவர் ஆவார். இக்குழுவில் மாநில அளவிலான அலுவலர்களான பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக இடம் பெற்றுள்ளனர்.

இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களான கல்வி உதவித்தொகை திட்டம், சிறப்பு வழிகாட்டி புத்தகங்கள் வழங்குதல், மிதிவண்டிகள் வழங்குதல், விடுதிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் ஆகியன இலக்கு 1 –வறுமையை ஒழித்தல், இலக்கு 4 –தரமான கல்வி, இலக்கு 10 –ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல் ஆகிய இலக்குகளை அடைய விழைகிறது.

கிராமப்புற மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் இலக்கு 5 –பாலின சமத்துவத்தினை அடைய விழைகிறது.

இத்துறை, தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம், சீர்மரபினர் நல வாரியம்,

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையம், தமிழ்நாடு வக்ஃப் வாரியம் ஆகியன மூலம் இலக்கு 1 –வறுமையை ஒழித்தல், இலக்கு 8 –கண்ணியம்மிக்க வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி, இலக்கு 10 –ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் ஆகிய நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய விழைகிறது.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் இலக்கு 1 –வறுமையை ஒழித்தல், இலக்கு 8 –கண்ணியம்மிக்க வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி, இலக்கு 10 –ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் ஆகிய இலக்குகளை அடைய விழைகிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் சமூக பொருளாதார வளர்ச்சி அடைய இத்துறை தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றும்.

## 2. இடஒதுக்கீடு

தமிழ்நாட்டில் பல்லாண்டு காலமாக பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கென இடஒதுக்கீடு கொள்கை வெற்றிகரமாக

செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசு பணிகளில் நியமனங்கள் மற்றும் கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை ஆகியவற்றிற்கான இடஒதுக்கீட்டைச் செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. 1921 ஆம் ஆண்டு முதல் இடஒதுக்கீடு கொள்கை தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக இப்பிரிவினர் பயனடைந்து சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளனர். தமிழ்நாட்டில் இடஒதுக்கீட்டின் அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்போது 69 விழுக்காடு இடஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:

| **வ. எண்.** | **பிரிவு** | **இடஒதுக்கீடு விழுக்காடு** |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 26.5 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்கள் | 3.5 |
| 3. | மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு / சீர்மரபினர் | 20 |
| 4. | ஆதிதிராவிடர் | 18 |
| 5. | பழங்குடியினர் | 1 |
| **மொத்தம்** | | **69** |

இந்திரா சஹானி எதிர் மைய அரசு வழக்கில் (மண்டல் குழு வழக்குகள்) இடஒதுக்கீட்டினை **50** விழுக்காடு என்ற அளவிற்கு கட்டுப்படுத்தி இந்திய உச்ச நீதிமன்ற அரசமைப்பு நீதியர் ஆயம் தீர்ப்பு அளித்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு **69** விழுக்காடு இடஒதுக்கீட்டினை தொடர்ந்து செயல்படுத்தும் பொருட்டு **1993** ஆம் ஆண்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு (கல்வி நிலையங்களில் இடங்களையும், மாநில அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் அல்லது இடங்களை ஒதுக்கீடு செய்தல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் **45/1994)** நிறைவேற்றியது. பின்னர், அரசியலமைப்பு சட்டத்தின் பிரிவு **31–**பி–இன் கீழ் பாதுகாப்பு பெறும் பொருட்டு தமிழ்நாடு சட்டம் **45/1994** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது விவர அட்டவணையில் சேர்க்கப்பட்டது.

தமிழ்நாடு சட்டம் **45/1994**ன் செல்லுந்தன்மையை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கின் மீது **13.07.2010** அன்று உச்ச நீதிமன்றம் எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை மாநில அரசு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அளிக்க வேண்டும் என்றும், அவ்விவரங்களின் அடிப்படையில் மாநிலத்தில் உள்ள

பல்வேறு பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டிய இடஒதுக்கீட்டின் அளவினை தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் முடிவு செய்ய வேண்டுமென்றும் தீர்ப்பளித்தது. மாநில அரசால் வழங்கப்பட்ட எண்ணிக்கை அடிப்படையிலான விவரங்களை ஆய்வு செய்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டின் அளவு சரியென பரிந்துரை அளித்தது.

ஆணையம் அளித்த பரிந்துரையினை அரசு ஏற்றுக் கொண்டு கல்வி நிலையங்களில் மாணவ, மாணவியர் சேர்க்கை மற்றும் மாநில அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்கள் ஆகியவற்றில் வளமான பிரிவினரை நீக்கம் செய்யாமல் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டினை உறுதி செய்து 11.07.2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

## 3. கல்வி

சமுதாய மேம்பாட்டிற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் கல்வி மிகவும் இன்றியமையாததாகும். எனவே, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி

முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

சமூகத்தில் நலிவடைந்த பிரிவினரின் கல்வி வளர்ச்சிக்காக விடுதி வசதிகள், கல்வி உதவித் தொகை வழங்குதல், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், சீருடை வழங்குதல், ஊக்கத் தொகை வழங்குதல் மற்றும் மிதிவண்டிகள் வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 4. விடுதிகள்

தமிழ்நாட்டில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்டுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை எவ்வித இடையூறுமின்றி தொடர்வதற்கு ஏதுவாக இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் **1,354** விடுதிகள் இயங்கி வருகின்றன. துறை வாரியான விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

| **வ. எண்.** | **துறை** | **விடுதிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1. | பிற்படுத்தப்பட்டோர் நலன் | 740 |
| 2. | மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 596 |
| 3. | சிறுபான்மையினர் நலன் | 18 |
| **மொத்தம்** | | **1,354** |

மொத்தமுள்ள 1,354 விடுதிகளுள் 1,099 பள்ளி விடுதிகளாகும் மற்றும் 255 கல்லூரி விடுதிகளாகும். இவற்றுள் 845 மாணவர் விடுதிகள் ஆகும் மற்றும் 509 மாணவியர் விடுதிகளிள் ஆகும். இவ்விடுதிகளில் கடந்த ஆண்டு 85,914 மாணவ, மாணவியர் தங்கிப் பயின்று பயனடைந்தனர். 2020–2021 ஆம் ஆண்டில் 7 பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக தரம் உயர்த்தப்பட உள்ளன. விடுதி மாணவ, மாணவியர் உணவுக்கான கட்டணம் உட்பட எவ்வித கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மாணவ, மாணவியருக்கான விடுதி செலவினம் முழுவதையும் அரசே ஏற்கிறது. பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 1 இலட்சத்திற்கு மிகாமல் உள்ள மாணவ, மாணவியர் விடுதிகளில் சேர தகுதி பெற்றவர்களாவர்.

இவ்விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் அதிகாரத்திற்குட்பட்ட கூடுதல் இடங்கள் அனுமதிக்கப்பட்ட பின்னரும், தேவை அதிகரிப்பின் விடுதிகளில் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக, மொத்தம் 2,185 மாணவ,

மாணவியரைச் சேர்த்திட, துறை தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒவ்வொரு விடுதியிலும் 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

### 4.1 புதிய விடுதிகள் திறப்பு

தேவையின் அடிப்படையில் புதிய விடுதிகள் துவங்கப்பட்டு வருகின்றன. 2019–2020 ஆம் ஆண்டில் 6 கல்லூரி விடுதிகள் 600 மாணவ, மாணவியர் கூடுதலாக பயன்பெறும் வகையில் துவங்கப்பட்டுள்ளன.

**4.2 உணவுக் கட்டணம்**

பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ. 755–லிருந்து ரூ. 900 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் ரூ. 875–லிருந்து ரூ. 1,000 ஆகவும் 1.6.2017 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு வழங்குவதற்கு பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ.20–ம், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ. 40–ம் வழங்கப்படுகிறது.

சோப்பு மற்றும் எண்ணெய் போன்றவற்றிற்காக மாதாந்திர பல்வகை செலவினம் பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ. 50 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு ரூ. 75 ஆகவும் வழங்கப்படுகிறது. இத்தொகையானது மின்னணு பரிமாற்றம் மூலம் நேரடியாக மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

2019–2020 ஆம் ஆண்டில் விடுதிகளின் உணவுக் கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற செலவினங்களுக்காக ரூ. 27,122.09 இலட்சம் செலவிடப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2020–2021 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 29,783.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. 16,114.55 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. 13,668.79 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.3 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்**

1. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.
2. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு விலையில்லா சிறப்பு வழிகாட்டி நூல்கள் வழங்கப்படுகின்றன.
3. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப்புத்தகங்களும் விலையில்லாமல் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.
4. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், புத்தக அலமாரிகள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப்பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர்

சுத்திகரிப்புக் கருவி, சுகாதார குட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு இரண்டடுக்கு கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிக்கலன் வழங்கப்படுகின்றன.

5. விடுதி மாணவ, மாணவியருக்கு பாய்கள், ஜமக்காளங்கள், போர்வைகள், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வழங்கப்படுகின்றன.

6. 4 முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு, மதிய உணவு திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுவதைப் போன்ற வண்ணம் மற்றும் வடிவமைப்பில் நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

7. அனைத்து விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்புப் பள்ளி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

8. ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

9. மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதி மாணவ, மாணவியருக்கு கம்பளி ஆடை வழங்கப்படுகிறது.

10. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.

11. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ,மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

12. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

13. விடுதிகளில் தங்கி 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**4.4 2019–2020 ஆண்டில் விடுதிகளின் மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டங்கள்**

1. 6 புதிய கல்லூரி விடுதிகள் ரூ. 257.10 இலட்சம் செலவில் துவங்கப்பட்டுள்ளன.
2. 7 பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக ரூ. 45.72 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.
3. 1,341 விடுதிகளில் மாணவர்களின் வருகையை உறுதி செய்யும் வகையில் ரூ. 297.88 இலட்சம் செலவில் பயோ மெட்ரிக் முறை நிறுவப்படவுள்ளது.
4. வாடகை கட்டடங்களில் இயங்கும் 14 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளுக்கு ரூ. 38 கோடி மதிப்பீட்டில் சொந்த கட்டடங்கள் கட்ட ஆணையிடப்பட்டுள்ளது.

5. மாநில மற்றும் மத்திய அரசின் பங்களிப்புடன் ரூ. 39.57 கோடி மதிப்பீட்டில் 12 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டிட ஆணையிடப்பட்டுள்ளது.

6. 1,334 விடுதிகளுக்கு அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள வழங்கப்படும் தொகை ரூ. 15,000 / ரூ. 20,000–லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்பட்டது .

7. 1,088 பள்ளி விடுதிகளுக்கு மாவரைக்கும் இயந்திரம், 1,301 விடுதிகளுக்கு மரச்சாமான்கள் மற்றும் பாத்திரங்களை வழங்க ரூ. 683.60 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8. விடுதிகளுக்கான பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள கூடுதலாக ரூ. 5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

9. அரசால் அங்கீகரிக்கப்பட்ட 39 தனியார் விடுதிகளில் தங்க அனுமதிக்கப்படும் மாணவ, மாணவியரின் பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ. 50,000–லிருந்து ரூ. 1,00,000 ஆக உயர்த்தப்பட்டது.

10. மாநில அளவில் சிறந்த 3 விடுதிகளை தேர்வு செய்து பரிசுகள் வழங்க ரூ. 1.27 இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

11. **87** கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் இரும்பு மற்றும் மரத்திலான இரண்டடுக்கு கட்டில்கள் ரூ. **486.80** இலட்சம் செலவில் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

12. **249** கல்லூரி விடுதிகளுக்கு அகன்ற அலைவரிசை வசதியுடன் (Broad band) BSNL தொலைபேசி இணைப்பு வழங்க ரூ. **30.35** இலட்சம் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் விடுதிகளுக்கு உணவு மானியம்

அரசால் அங்கீகரிக்கப்பட்ட **39** தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு உணவு மானியமாக மாதமொன்றுக்கு ரூ. **900** வழங்கப்படுகிறது. **2019–2020** ஆம் ஆண்டு முதல் இம்மானியத்தை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ. **50,000**–லிருந்து ரூ. **1,00,000** ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் **2019–2020** ஆம் ஆண்டில் **952** மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் ரூ. **85.81** இலட்சம் செலவிடப்படுகிறது.

இத்திட்டத்திற்காக **2020–2021** ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. **85.81** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. **43.81** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. **42** இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6. மாநில அளவில் சிறந்த மூன்று விடுதிகளுக்கும், பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்குதல்

விடுதிகளை சுகாதாரமான முறையில் பராமரிக்கும் காப்பாளர்கள்/காப்பாளினிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநில அளவில் சிறந்த காப்பாளர்கள்/காப்பாளினிகள் தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசாக ரூ. **5,000**, இரண்டாம் பரிசாக ரூ. **3,000** மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. **2,000** வழங்கப்பட்டு வந்தது. **2019–2020** ஆம் ஆண்டு முதல் மாநில அளவில் **3** சிறந்த விடுதிகளை தேர்ந்தெடுத்து கேடயம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும். மேலும், அவ்விடுதிகளில் பணியாற்றும்

பணியாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண். | வகை | முதல் பரிசு ரூ. | இரண்டாம் பரிசு ரூ. | மூன்றாம் பரிசு ரூ. |
|---|---|---|---|---|
| 1. | காப்பாளர்/காப்பாளினி | 20,000 | 15,000 | 10,000 |
| 2. | காவலர் மற்றும் ஏவலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 3. | சமையலர் | 10,000 | 5,000 | 3,000 |
| 4. | துப்புரவு பணியாளர் | 5,000 | 3,000 | 2,000 |

**2019–2020** ஆம் ஆண்டில் பரிசுகள் வழங்குவதற்காக **ரூ. 1.37** இலட்சம் செலவிடப்படுகிறது.

**2020–2021** ஆம் ஆண்டிற்கு ரூ. **1.50** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் **1,354** விடுதிகளில் **1,290** விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன மற்றும் **64** விடுதிகள் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. **12** விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, பொதுப்பணித் துறை மூலம் கட்டுமானப் பணிகள் நடைபெற்று

வருகின்றன. 2019–2020 ஆம் ஆண்டில் மாநில அரசு திட்டத்தின் கீழ் 14 விடுதிகளுக்கு ரூ. 38 கோடி செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டவும் மற்றும் மாநில மற்றும் மத்திய அரசின் பங்களிப்புடன் ரூ. 39.57 கோடி மதிப்பீட்டில் 12 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டவும் ஆணைகள் வெளியிடப்பட்டு பொதுப்பணித் துறை மூலம் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எஞ்சிய 26 விடுதிகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த மூன்றாண்டுகளில் 99 விடுதிகளுக்கான கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

2019–2020 ஆம் ஆண்டில் கட்டுமானப் பணிகளுக்காக ரூ. 136.95 இலட்சம் செலவிடப்பட்டது.

இத்திட்டத்திற்காக 2020–2021 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 2,491.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. 733.02 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. 1,758.93 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. விடுதி கட்டடங்கள் பராமரிப்பு

அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பணிகளுக்காக ஆண்டு தோறும் ரூ. 600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 2019–2020 ஆம் ஆண்டில் 361 விடுதிகளின் பராமரிப்பு பணிகள் ரூ. 600 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டன. இது தவிர 2019–2020 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகளுக்கு என ரூ. 500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 85 விடுதிகளில் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் பணிகள் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டன.

2020–2021 ஆம் ஆண்டில் விடுதிகளின் பராமரிப்பு பணிகளுக்காக ரூ. 600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த மாணவ, மாணவியர் தங்களது கல்வியினை தொடர ஏதுவாக இவ்வரசு பள்ளிப்படிப்பு, பள்ளி மேற்படிப்பு மற்றும் இலவசக் கல்வி உதவித் தொகை என மூன்று

கல்வி உதவித் தொகைத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. கல்வி உதவித் தொகை பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ. 2 இலட்சம் ஆகும்.

### 9.1 பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், 10 ஆம் வகுப்பு தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நிலையில் பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 10 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ. 2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ,

மாணவியருக்கு எவ்வித நிபந்தனையின்றி இத்தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2019–2020** ஆம் ஆண்டில் **1,17,895** மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. **179.05** இலட்சம் செலவிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

| **மாணவ, மாணவியர் எண்ணிக்கை** | | | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| **47,944** | **69,951** | **1,17,895** | **66.69** | **112.36** | **179.05** |

இத்திட்டத்திற்காக **2020–2021** ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. **189.97** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. **103.00** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. **86.97** இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 9.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு

கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களித்து அரசு உத்தரவிட்டுள்ளது. மேலும், 11 மற்றும் 12 ஆம் வகுப்பு தமிழ் வழிக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்களிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நிலையில் பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஆங்கில வழியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்கு அவர்களது பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ. 2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு எவ்வித நிபந்தனையின்றி இத்தேர்வுக் கட்டணம் ஈடு செய்யப்படுகிறது.

## 9.3 கல்லூரி மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகை

ஐ.டி.ஐ, பட்டயப் படிப்பு, பட்டமேற்படிப்பு, தொழிற்கல்வி மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும்

சிறப்புக் கட்டணம் அரசு கல்வி நிலையங்களில் நிர்ணயிக்கப்பட்ட அளவில் வழங்கப்படுகிறது. தேர்வுக் கட்டணம் முழுமையாகவும், புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் வழங்கப்படுகிறது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் இரண்டாவது முறைமாற்றம் (Second Shift) வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கும் காலை நேர அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் அதே விதிமுறைகளுக்கும், வரையறைகளுக்கும் உட்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகையினை பெற பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ. 2,00,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும். மேலும், கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித்தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது. பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 175 என்ற விகிதத்திலும், தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 350 என்ற விகிதத்திலும், ஐ.டி.ஐ/ பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு மாதம்

ஒன்றுக்கு ரூ. 225 என்ற விகிதத்திலும் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு இக்கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 2,82,800 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. 8,393 இலட்சம் செலவிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

| பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் எண்ணிக்கை | | | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/ சீம | மொத்தம் | பிவ | மிபிவ/ சீம | மொத்தம் |
| 1,48,400 | 1,34,400 | 2,82,800 | 5,300.00 | 3,093.00 | 8,393.00 |

இத்திட்டத்திற்காக 2020–2021 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 8,300 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. 5,300 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. 3,000 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10. இலவசக் கல்வி உதவித்தொகை

### 10.1 பட்டப்படிப்பு

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த அரசு மற்றும் அரசு உதவி

பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவ,மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் ஆகியவை அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகின்றது (அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் மூன்று ஆண்டு இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு கற்பிப்பு கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது). புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகை எவ்வித நிபந்தனையுமின்றி வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித்தொகையுடன், கல்வி நிறுவனங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ,மாணவியருக்கு மாதம் ரூ. 175 வீதம் ஆண்டிற்கு 10 மாதங்களுக்கு உண்டி உறையுள் கட்டணம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 1,93,449 மாணவ,மாணவியர் பயனடையும் வகையில் ரூ. 3,488.02 இலட்சம் செலவிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

| மாணவ,மாணவியர் எண்ணிக்கை | | | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| 1,03,555 | 89,894 | 1,93,449 | 1,888.02 | 1,600.00 | 3,488.02 |

இத்திட்டத்திற்காக **2020–2021** ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. **3,588.02** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. **1,888.02** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. **1,700** இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.2 பட்டயப் படிப்பு**

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Polytechnics) பட்டயப் படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ,மாணவியருக்கு கற்பிப்புக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகிறது. புத்தகக் கட்டணம் கல்வி உதவித்தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது.

பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. **2,00,000**–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டய/ பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித்தொகையுடன் உண்டி, உறையுள் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. **225** வீதம் ஆண்டிற்கு **10** மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2019–2020** ஆம் ஆண்டில் **3,632** மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. **152** இலட்சம் செலவிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

| **மாணவ, மாணவியர் எண்ணிக்கை** | | | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **2,074** | **1,558** | **3,632** | **89.00** | **63.00** | **152.00** |

இத்திட்டத்திற்காக **2020–2021** ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. **216.49** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. **126.49** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. **90.00** இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.3 தொழிற்படிப்பு**

அரசு, அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்பட்டு தொழிற்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ,மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பப் பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள் அரசு நிர்ணயித்த அளவில் வழங்கப்படுகிறது. புத்தகக் கட்டணம் கல்வி உதவித் தொகை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறும் மற்றும் தேர்வுக் கட்டணம் முழுமையாகவும் வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. **2,00,000**–க்கு மிகாமல் இருக்க வேண்டும் மற்றும் குடும்பத்தில் முதல் பட்டதாரியாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு இக்கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், கல்வி நிலையங்களே நடத்தும் விடுதிகளில் தங்கிப்பயிலும் மாணவ, மாணவியருக்கு மேற்படி கல்வி உதவித்தொகையுடன் உண்டி,

உறையுள் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. **350** வீதம் ஆண்டிற்கு **10** மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2019–2020** ஆம் ஆண்டில் **1,30,379** மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. **6,961.38** இலட்சம் செலவிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

| **மாணவ, மாணவியர் எண்ணிக்கை** | | | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **80,386** | **49,993** | **1,30,379** | **4,301.58** | **2,659.80** | **6,961.38** |

இத்திட்டத்திற்காக **2020–2021** ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. **8,006.24** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. **4,806.24** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. **3,200** இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.4 இணையதளம் மூலம் கல்வி உதவித்தொகை ஒப்பளிப்பு செய்தல்

கல்லூரிகளில் பயிலும், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ,மாணவியருக்கு கல்வி உதவித்தொகை தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்ட www.escholarship.tn.gov.in என்ற இணையதளம் மூலம் ஒப்பளிப்பு செய்து வழங்கப்பட்டு வருகிறது. கல்வி உதவித்தொகைகள் அந்தந்த துறைத் தலைமை அலுவலகங்கள் மூலமாகவே மையப்படுத்தப்பட்ட பணம் செலுத்தும் முறையில் மாணவ, மாணவியரின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக மின்னணு பரிமாற்றம் (ECS) மூலம் வரவு வைக்கப்படுகிறது.

## 11. பட்டியலிடப்பட்ட மத்திய அரசு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகைத் திட்டம்

பட்டியலிடப்பட்ட மத்திய அரசு கல்வி நிறுவனங்களான ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்டோர்,

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ,மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் புதிய திட்டம் **2019–2020** ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக **100** மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும். இக்கல்வித் தொகை பெறுவதற்கான நிபந்தனைகள் விவரம் பின்வருமாறு:

**நிபந்தனைகள்:**

1) மாணவ, மாணவியர் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
2) தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
3) ஐஐடி, ஐஐஎம், ஐஐஐடி, என்ஐடி மற்றும் மத்திய பல்கலைகழகங்களில் பட்டப்படிப்பு மற்றும் பட்டமேற்படிப்பு பயிலும் மாணவர்களாக இருத்தல் வேண்டும்.
4) பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ. **2.00** இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

5) மாணவ, மாணவியரின் படிப்பிற்கான காலத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.

6) மாணவ, மாணவியருக்கு கல்வி நிறுவனங்களால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்களான கற்பிப்புக் கட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதர கட்டாயக் கட்டணங்களுக்காக செலுத்திய தொகையாக மாணவர் ஒருவருக்கு அதிக பட்சமாக ரூ. 2,00,000 வழங்கப்படும்.

7) கூடுதலான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் பெறப்படின், தகுதியான மாணவ, மாணவியர் 12 ஆம் வகுப்பு தேர்வில் அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட வேண்டும்.

இத்திட்டத்திற்கு பிற்படுத்தப்பட்டோர் இனத்தைச் சார்ந்த 60 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 1,20,00,000 மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த 40 மாணவ, மாணவியர்களுக்கு ரூ. 80,00,000 ஆக மொத்தம் ரூ. 2 கோடி அரசு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது.

## 12. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த கிராமப்புற பள்ளி மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்

கிராமங்களில் நிலவும் வறுமையின் காரணமாக குறிப்பாக மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்களிடையே ஆரம்ப பள்ளி அளவிலேயே படிப்பை நிறுத்திவிடும் சூழ்நிலையை தவிர்த்திடும் பொருட்டும், கிராமப்புற பெண் குழந்தைகளிடையே கல்வியை ஊக்குவிக்கும் நோக்கத்துடனும் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவியர் ஒவ்வொருவருக்கும் வருடத்திற்கு ரூ. 500 என்ற வீதத்திலும், 6 ஆம் வகுப்பில் பயிலும் மாணவியர் ஒவ்வொருவருக்கும் வருடத்திற்கு ரூ. 1,000 என்ற வீதத்திலும் ஊக்கத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2017–2018 ஆம் ஆண்டு முதல் ரூ. 72,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 2,56,556 மாணவியர் பயனடையும் வகையில் ரூ. 1,584.61 இலட்சம் செலவிடப்படுகிறது.

**2020–2021** ஆம் ஆண்டிற்கு ரூ. **1,675** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள்

பிரமலை கள்ளர் வகுப்பினரின் கல்வி நிலையினை மேம்படுத்தும் பொருட்டு, அவ்வகுப்பினர் பெருமளவில் வாழும் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் **213** தொடக்கப் பள்ளிகள், **22** நடுநிலைப் பள்ளிகள், **22** உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் **38** மேல்நிலைப் பள்ளிகள் என மொத்தம் **295** கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறையின் கீழ் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளில் **24,480** மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

**2011–2012** ஆம் ஆண்டில் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தலா **5** பள்ளிகள் வீதம் மொத்தம் **15** கள்ளர் சீரமைப்பு ஆரம்பப் பள்ளிகளில், ஆங்கில வழி மழலையர் வகுப்புகள் (LKG) தொடங்கப்பட்டன. **2019–2020** ஆம் ஆண்டில் **15** அரசு கள்ளர் சீரமைப்பு

மேல்நிலைப் பள்ளிகளில் **6** ஆம் வகுப்பில் ஆங்கில வழி கல்வி துவக்கப்பட்டது.

இம்மாணவ, மாணவியருக்கு அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைப் போன்று, சிறப்பு ஊக்கத் தொகை, காலணி, மடிக்கணினி, புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, வண்ணப் பென்சில்கள் மற்றும் உலக வரைபடப் புத்தகம் ஆகியன பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன. **2018–2019** ஆம் கல்வியாண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் **10** ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் **94.9%**, **11** ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் **96.5%** மற்றும் **12** ஆம் வகுப்பு தேர்ச்சி விகிதம் **96.8%** ஆகும்.

**2019–2020** ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் செயல்பாட்டிற்காக ரூ. **11,780.62** இலட்சம் செலவிடப்படுகிறது.

**2020–2021** ஆம் ஆண்டிற்கு ரூ. **13,736.45** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.1 கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு

கள்ளர் சீரமைப்புப் பள்ளிக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் பணிகளுக்காக ஆண்டுதோறும் ரூ. 1 கோடி அரசு ஒதுக்கீடு செய்து வருகிறது. 2019–2020 ஆம் ஆண்டில் 20 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2020–2021 ஆம் ஆண்டிற்கும் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளின் கட்டட பராமரிப்புக்காக ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.2 கள்ளர் சீரமைப்பு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டம்

கள்ளர் சீரமைப்பு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் தத்தமது பாடப்பிரிவில் 100 விழுக்காடு மாணவ, மாணவியரை தேர்ச்சி பெறச் செய்யும் முதுகலைப் பட்டதாரி மற்றும் இளங்கலை பட்டதாரி ஆசிரியர்களுக்கு தலா ரூ. 5,000 பரிசுத் தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேலும், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியரை அரசுப் பொதுத்

தேர்வில் 95 விழுக்காடு மற்றும் அதற்கு அதிகமாக தேர்ச்சி பெறச் செய்யும் உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தலா ரூ. 10,000 பரிசுத்தொகை மற்றும் நற்சான்றிதழ் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2019–2020 ஆம் ஆண்டில் ரூ. 30 இலட்சம் பரிசு தொகைகளுக்காக செலவிடப்படுகிறது.

2020–2021 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 31 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 13.3 2019–2020 ஆம் ஆண்டில் கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட புதிய திட்டங்கள்

1. 15 அரசு கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.
2. 213 அரசு கள்ளர் சீரமைப்பு தொடக்கப்பள்ளிகளுக்கு ரூ. 4.12 கோடி செலவில் மரத்தாலான இருவர் அமரும் வசதியுள்ள மேசையுடன் கூடிய பெஞ்ச் வழங்கிட ஆணையிடப்பட்டுள்ளது.
3. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் 3,450 மாணவ, மாணவியருக்கு

ரூ. 1.71 கோடி செலவில் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி வழங்கிட ஆணையிடப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

4. 10 அரசு கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் ரூ. 67.50 இலட்சம் செலவில் வழங்கப்பட்டன.

5. 23 அரசு கள்ளர் சீரமைப்பு மேல்நிலைப் பள்ளிகளுக்கு திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Rooms) ரூ. 1.06 கோடி செலவில் அமைத்துத் தர ஆணையிடப்பட்டுள்ளது.

## 14. சீருடைகள்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கி 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 விலையில்லா இணை சீருடைகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு 4 விலையில்லா இணை சீருடைகள் சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையால் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. இச்சீருடைகள் வண்ணம் மற்றும்

வடிவமைப்பில் அரசுப் பள்ளிகளில் பின்பற்றப்படுவது போலவே வழங்கப்படுகின்றன. சீருடைக்கான துணிகள் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, மாவட்ட மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் **2019–2020** ஆம் ஆண்டில் **38,561** மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. **539.90** இலட்சம் செலவிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

| **மாணவ, மாணவியர் எண்ணிக்கை** | | | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| **19,750** | **18,811** | **38,561** | **275.50** | **264.40** | **539.90** |

இத்திட்டத்திற்காக **2020–2021** ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. **476** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. **250** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. **226** இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15. மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

அரசு, அரசு நிதியுதவி பெறும் மற்றும் பகுதியாக நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு வருமான உச்ச வரம்பின்றி விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன. பள்ளி வளாகத்தில் அமைந்துள்ள விடுதியில் தங்கியுள்ளோர் மற்றும் உண்டி உறைவிடப்பள்ளி மாணவ, மாணவியர் விலையில்லா மிதிவண்டிகள் பெறத் தகுதியற்றவர் ஆவர்.

இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 3,62,493 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. 14,281.48 இலட்சம் செலவிடப்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு:

| **மாணவ, மாணவியர் எண்ணிக்கை** | | | **தொகை (ரூபாய் இலட்சத்தில்)** | | |
|---|---|---|---|---|---|
| பிவ | மிபிவ/சீம | மொத்தம் | பிவ | மிபிவ/சீம | மொத்தம் |
| 1,90,298 | 1,72,195 | 3,62,493 | 7,494.73 | 6,786.75 | 14,281.48 |

இத்திட்டத்திற்காக 2020–2021 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 14,283.77 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில்

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. **7,496.28** இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. **6,787.49** இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள்

### 16.1 சலவைப் பெட்டிகள் வழங்குதல்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருள் ஏழ்மை நிலையில் சலவைத் தொழில் செய்பவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த விலையில்லா சலவைப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ. 72,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2019–2020** ஆம் ஆண்டிற்கு ரூ. **109** இலட்சம் மதிப்பீட்டில் **2,000** சலவைப் பெட்டிகளை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2020–2021** ஆம் ஆண்டிற்கு ரூ. **109** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16.2 தையல் இயந்திரங்கள் வழங்குதல்**

ஏழ்மை நிலையிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்த விலையில்லா மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ. 72,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2019–2020 ஆம் ஆண்டிற்கு 3,000 மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களை ரூ. 135 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயனாளிகளுக்கு வழங்கிட ஆணைகள் வெளியிடப்பட்டு கொள்முதல் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்திற்காக 2020–2021 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 131.38 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. 63.72 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. 67.66 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16.3 வீட்டு மனை வழங்குதல்**

வீட்டு மனையற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினருக்கு வீட்டு மனைகள் விலையேதுமின்றி வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளின் ஆண்டு வருமானம் ரூ. 72,000–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2019–2020 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 300 பயனாளிகளுக்கு வீட்டுமனைகள் ரூ. 123.55 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக 2020–2021 ஆம் ஆண்டிற்கு மொத்தம் ரூ. 350.02 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கு ரூ. 200 இலட்சமும், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறைக்கு ரூ. 150.02 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**17. சீர்மரபினர் நல வாரியம்**

சீர்மரபினர் வகுப்பினரின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி மேம்பாட்டிற்காக "சீர்மரபினர் நல வாரியம்" அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

**சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| **வ. எண்.** | | **நிதி உதவிகள் விவரம்** | **உதவித் தொகை ரூ.** |
|---|---|---|---|
| 1. | அ) | **விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை**<br>விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | 20,000 |
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஆ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சிப் பெற்றவர்களுக்கு | 1,000 |
| | இ) | 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் | 1,000 |

| வ. எண். | | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
| --- | --- | --- | --- |
| | | குழந்தைகளுக்கு | |
| | ஈ) | 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| | உ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஊ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750 |
| | எ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஏ) | (i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 6,000 |
| | ஐ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஒ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,200 |

| | | | |
|---|---|---|---|
| 5. | | திருமண உதவித்தொகை | 2,000 |
| 6. மகப்பேறு உதவித்தொகை | | | |
| | அ)<br>ஆ) | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம்<br>6 மாதங்களுக்கு<br>கருச்சிதைவு /கருக்கலைப்பு | 6,000<br>3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 வரை |
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000 |

இது வரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள **3,096** உறுப்பினர்களுக்கு ரூ. **72.50** இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 18. தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம்

நரிக்குறவர்களுக்கு கல்வி, மாற்று தொழில் புரிவதற்கான உதவி ஆகியவற்றை அளிக்கவும், அவர்களுக்கு பல்வேறு நல உதவிகள் வழங்குவதற்கும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் செயல்பட்டு வருகிறது. இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும்

நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்கள் தனிநபராகத் தொழில் துவங்க ரூ. 7,500 மானியமும், குழுவாகத் தொழில் துவங்க அதிகபட்சமாக ரூ. 1,25,000 பின்நிகழ்வு மானியமும் (Back ended subsidy) வழங்கப்படுகிறது. இவ்வாரியத்திற்கென இதுவரை ரூ. 1,040 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | அ) | **விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை**<br>விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,00,000 |
| | ஆ) | விபத்தினால் ஏற்படும் ஊனம் | 10,000 முதல் 1,00,000 வரை |
| 2. | | இயற்கை மரணம் | 20,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 3. | | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| 4. கல்வி உதவித்தொகை | | | |
| | அ) | ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | 500 |
| | ஆ) | 6 ஆம் வகுப்பு முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு | 1,000 |
| | இ) | 10 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஈ) | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000 |
| | உ) | 11 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000 |
| | ஊ) | 12 ஆம் வகுப்பு படித்துவரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500 |
| | எ) | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500 |
| | ஏ) | (i) முறையான பட்டப்படிப்பிற்கு | 1,500 |
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்டப்படிப்பிற்கு | 1,750 |
| | ஐ) | (i) முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 4,000 |

| வ. எண். | | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| | | (ii) விடுதி வசதியுடன் கூடிய முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 5,000 |
| | ஒ) | (i) தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 4,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற்கல்வி பட்டப்படிப்பிற்கு | 6,000 |
| | ஓ) | (i) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் தொழிற் கல்வி பட்டமேற்படிப்பிற்கு | 8,000 |
| | ஔ) | (i) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,000 |
| | | (ii) விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சிப் படிப்பிற்கு | 1,200 |
| 5. | | திருமண உதவித்தொகை | 2,000 |
| 6. | | மகப்பேறு உதவித்தொகை | |
| | அ) | மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1,000 வீதம் 6 மாதங்களுக்கு | 6,000 |
| | ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | 3,000 |
| 7. | | மூக்குக்கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல் | 500 வரை |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | | உதவித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 8. | | முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்) | 1,000 |
| 9. | அ) | தனி நபர் தொழில் தொடங்க மானியம் | 7,500 |
| | ஆ) | குழுவாக தொழில் தொடங்க மானியம் | 10,000 தனி நபருக்கு (அல்லது) 1,25,000 குழுவிற்கு |

இது வரை இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள **13,798** உறுப்பினர்களுக்கு **ரூ. 780.23** இலட்சம் மதிப்பிலான நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2020–2021** ஆம் ஆண்டிற்கு, ரூ. **100** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 19. சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது

சமூக நீதிக்காகப் மிகச்சிறந்த முறையில் பங்காற்றியவர்களை சிறப்பு செய்யும் பொருட்டு சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது

1994 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. ஆண்டுதோறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தேர்வு செய்யப்படும் ஒருவருக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இவ்விருது ஒரு தங்கப் பதக்கமும், ரூ. 1 இலட்சம் பொற்கிழியும் கொண்டதாகும். 2019 ஆம் ஆண்டுக்கான சமூக நீதிக்கான தந்தை பெரியார் விருது திரு. செஞ்சி ந.இராமச்சந்திரன், அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2020–2021 ஆம் ஆண்டிற்கு ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் நிருவாகக் குழுமம்

தமிழ்நாட்டில், வன்னியர் சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்காக, பல வன்னியர் வள்ளல்களால் உயிலாக எழுதி வைக்கப்பட்ட அறக்கட்டளைகளை அடையாளம் கண்டு, அவைகளை ஒருங்கிணைத்து, அவை உருவாக்கப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்காக, அரசு வன்னியர் பொதுச் சொத்து நல வாரியத்தை உருவாக்கியது.

அத்தகைய பொறுப்பாட்சி அமைப்புகள் மற்றும் நிலைக் கொடை அமைப்புகளைக் காத்திடவும் அவற்றைப் பேணுவதிலும் அக்கறை கொண்ட சமுதாய ஆர்வலர்கள் இத்தகைய பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகளை ஒருங்கிணைக்கவும், பாதுகாக்கவும் தனியாக சட்டம் ஒன்றை இயற்றக் கோரி அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர்.

அரசு ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் வன்னிய குல சத்திரியர் சமுதாயத்தைச் சேர்ந்த நபர்களால் அல்லது நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட அத்தகைய பொறுப்பாட்சிகளின் சொத்துக்களையும், நிலைக்கொடைகளின் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கு நிருவாகக்குழுமம் ஒன்றை அமைத்துருவாக்குவதெனவும், இந்த நோக்கத்திற்காக தனிச்சட்டம் ஒன்றை இயற்றுவதெனவும் முடிவு செய்து, தமிழ்நாடு வன்னிய குல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டம் 2018" என்கிற புதிய சட்டத்தினை இயற்றியது. இச்சட்டமானது **04.02.2019** அன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இச்சட்டத்தின் கீழ் ‘‘தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் நிருவாகக் குழுமம்’’ ஒரு தலைவர் மற்றும் பத்து உறுப்பினர்களுடன் இவ்வரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட நிர்வாகக் குழுமத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உறுப்பினர் – செயலாளர் ஒருவரையும் அரசு நியமித்துள்ளது. மேலும், 23 புதிய பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. ஒரு முறை மானியமாக ரூ. 1 கோடியும் மற்றும் தொடர் மானியமாக ரூ. 25 இலட்சமும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிருவாகக் குழுமத்தால் இதுவரை 83 அறக்கட்டளைகள் கண்டறியப்பட்டுள்ளன.

## 21. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1982 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இக்கழகம் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956–ன் கீழ் பதிவுபெற்ற ஒரு அரசுத்துறை நிறுவனமாகும். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனி நபர்கள் மற்றும் குழுக்கள் தங்களது பொருளாதார முன்னேற்றத்திற்காக சாத்தியக் கூறுள்ள சிறு தொழில்கள்,

வியாபாரம் ஆகியவற்றைச் செய்ய குறைந்த வட்டி விகிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் நிதியுதவி வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 30 கோடி. இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 12.27 கோடி. இந்நிறுவனம், தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடமிருந்து, தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதியின் மீது கடனாகப் பெறுகிறது.

2018–2019 ஆம் ஆண்டு அகில இந்திய அளவில் உயரிய செயல்பாட்டிற்காக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்திற்கு புதுதில்லியில் உள்ள தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தால் **சிறந்த செயல்பாட்டிற்கான (வெண்கலம்) விருது** வழங்கப்பட்டுள்ளது. **13.01.2020** அன்று நடைபெற்ற தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் தேசிய மாநாட்டின் போது மத்திய அரசின் மாண்புமிகு சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத்துறை அமைச்சர் அவர்களால் இவ்விருது வழங்கப்பட்டது.

**21.1 கடன் திட்டங்கள்**

இக்கழகம் தனி நபர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கி வருகிறது. கடன் திட்டங்களுக்கான பயனாளிகளை, அந்தந்த மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கான இணைப்பதிவாளர், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், மாவட்ட தொழிற்மையத்தின் பொது மேலாளர் மற்றும் அந்தந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் ஆகியோரைக் கொண்ட குழு தெரிவு செய்கிறது. கடன் திட்டங்களுக்கான அனுமதி மற்றும் நிதி, கூட்டுறவு வங்கிகள் / கூட்டுறவு சங்கங்கள் மூலம் விடுவிக்கப்படுகிறது.

கடன் திட்டங்களுக்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பு ரூ. 3,00,000 ஆக 1.4.2018 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**21.1.1 பொது காலக் கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ. 5 இலட்சம் வரை ஆண்டுக்கு 6 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. ரூ. 5 இலட்சத்திற்கு மேல் ரூ. 10 இலட்சம் வரை ஆண்டுக்கு

7 விழுக்காடு வட்டி விகிதத்திலும், ரூ. 10 இலட்சத்திற்கு மேல் ரூ. 15 இலட்சம் வரை ஆண்டுக்கு 8 விழுக்காடு வட்டி விகிதத்திலும் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும்.

### 21.1.2 பெண்களுக்கான புதிய பொற்காலத் திட்டம்

பெண்களின் சுயசார்பு பண்பினை வளர்க்கும் நோக்குடன் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சிறு வணிகம் செய்வதற்கு ஒரு பயனாளிக்கு அதிகபட்சம் ரூ. 2,00,000 வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்தும் கால அவகாசம் 3 முதல் 8 ஆண்டுகளாகும்.

### 21.1.3 பெண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ. 1,00,000 வரை ஆண்டுக்கு 4 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி

வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்த வேண்டிய கால அவகாசம் 4 ஆண்டுகளாகும்.

### 21.1.4 ஆண்களுக்கான நுண் கடன் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் ஆண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தனியாகவோ அல்லது குழுவாகவோ சிறுதொழில் / வணிகம் செய்வதற்கு கடன் வழங்கப்படுகிறது. உறுப்பினர் ஒருவருக்கு அதிகபட்சம் ரூ. 1,00,000 வரை ஆண்டுக்கு 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படுகிறது. கடனை திரும்ப செலுத்த வேண்டிய கால அவகாசம் 4 ஆண்டுகளாகும்.

தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம், சிறு விவசாயிகள் மற்றும் காய்கறிகள் பயிரிடுவோருக்கான சிறு கடன் திட்டம், மரபுசார் கலைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கான சுய தொழில் காலக் கடன் திட்டம், இளம் தொழிற் பட்டதாரிக்கான காலக் கடன் திட்டம் போன்ற கடன் திட்டங்களை 2012–2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டங்களின் கீழ், 2019–2020 ஆம் ஆண்டில் 29.02.2020 வரை 7,877 பயனாளிகளுக்கு ரூ. 4,098.93 இலட்சம் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | திட்டத்தின் பெயர் | பயனாளிகள் எண்ணிக்கை | கடன்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பொதுக்கால கடன் திட்டம் | 569 | 400.94 |
| 2. | பெண்களுக்கான புதிய பொற்கால திட்டம் | 205 | 112.97 |
| 3. | பெண்களுக்கான நுண் கடன் திட்டம் | 6,976 | 3,527.28 |
| 4. | ஆண்களுக்கான நுண் கடன் திட்டம் | 127 | 57.74 |
| மொத்தம் | | 7,877 | 4,098.93 |

2019–2020 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்குத் தொகையுடன் சேர்த்து நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ. 106 கோடியில் (தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் பங்குத் தொகை ரூ. 100 கோடி மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்குத் தொகை ரூ. 6 கோடி) 29.02.2020 வரை 7,877 பயனாளிகளுக்கு ரூ. 40.99 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகை ரூ. 65.01 கோடியினை 11,741 பயனாளிகளுக்கு 31.03.2020–க்குள் கடனாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2020–2021 ஆம் ஆண்டிற்கு பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ. 106 கோடி அளவில் (தேசிய பிற்படுத்தப்பட்டோர் நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் பங்குத் தொகை ரூ. 100 கோடி மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பங்குத் தொகை ரூ. 6 கோடி) கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**21.2 சிறு, குறு விவசாயிகளுக்கான நீர்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம்**

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த சிறு, குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்த மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு கூட்டுறவு வங்கிகள் / தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் 50 விழுக்காடு மானியத்துடன் அதிகபட்சம் ரூ. 1,00,000 வரை கடன் வழங்கப்படுகிறது. இதுவரை 3,582 சிறு, குறு விவசாயிகளுக்கு மானியமாக ரூ. 1,660.22 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

## 22. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்

இந்திரா சஹானி மற்றும் பிறர் – எதிர் – இந்திய யூனியன் மற்றும் பிறர் (J.T. 1992 (6) SC 273) என்கிற மண்டல் வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த வழிகாட்டுதல்களின் அடிப்படையில் ஒரு நிலையான அமைப்பாக தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் அமைக்கப்பட்டு, **15.3.1993** முதல் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

**2.** தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள் நீதிமுறை–சார்புடைய (quasi-judicial) தன்மை வாய்ந்தது. இவ்வாணையத்தின் செயல்வரம்புகளாவன:–

(i) பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோருதல் தொடர்பான மனுக்கள் மற்றும் பட்டியல்களில் மிகுதியாக சேர்க்கப்பட்டிருத்தல் அல்லது சேர்க்கப்படாமலிருத்தல் குறித்தான முறையீடுகள் ஆகியவற்றைப் பெற்று, ஆய்வு செய்து மற்றும் அதன்மீது பரிந்துரைகளை ஆணையம் வழங்குதல்;

(ii) அவ்வப்போது எடுக்கப்படும் முடிவுகளின்படி, பிற்படுத்தப்பட்டோர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்களை காலமுறைப்படி சீராய்வு செய்தல்;

(iii) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறு **16(4)** மற்றும் இதர பிற தொடர்புடைய கூறுகளின் அடிப்படையிலும், இப்பொருள் தொடர்பாக உச்ச நீதிமன்றம் எடுத்துள்ள பல்வேறு முடிவுகளையொட்டியும் ஆணையத்தின் பரிந்துரைகள் அமையவேண்டும்;

(iv) அவ்வப்போது அரசால் பரிந்துரை கோரப்படும் பிற்படுத்தப்பட்டோர் தொடர்பான பொருள்கள் பிறவற்றையும் ஆய்வு செய்து பரிந்துரை வழங்குதல்.

## 23. சிறுபான்மையினர் நலன்

சமுதாயத்தில் பல்வேறு பிரிவினரிடையே மத நல்லிணக்கதை பேணுவதற்கு இவ்வரசு உறுதிபூண்டுள்ளது. சிறுபான்மையினர் உரிமைகளை பாதுகாப்பதிலும், அவர்களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றதிற்கான பல்வேறு திட்டங்களைத் தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

## 23.1 தனி இடஒதுக்கீடு

பிற்படுத்தப்பட்டோர் இனத்தவர்களுக்கான 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 3.5 விழுக்காடு தனி இடஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அரசுப் பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.

## 23.2 சிறுபான்மையினர் விடுதிகள்

சிறுபான்மையினர் வகுப்பைச் சேர்ந்த ஏழை மாணவ, மாணவியர்கள் கல்வியினை தொடரும் வகையில் சென்னை, வேலூர், கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், மதுரை, தேனி, திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி, கடலூர் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் மொத்தம் 18 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ,

மாணவியருக்கு கட்டணமின்றி உண்டி, உறையுள் வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளன.

(i) விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களின், பொது அறிவை பெருக்கும் வகையில் ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கில நாளிதழும் இரண்டு தமிழ் நாளிதழ்களும் வழங்கப்படுகின்றன.

(ii) நூலகப் புத்தகங்கள், பாடக்குறிப்பு புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(iii) 12 ஆம் வகுப்பு வரை பயிலும் விடுதி மாணவ, மாணவியர்களுக்கு பள்ளி கல்வி துறையின் மூலம் விலையில்லா பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

(iv) 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் விடுதி மாணவ, மாணவியர்களுக்கு அரசு பொதுத் தேர்வுகளில் உயர் மதிப்பெண்கள் பெறும்வகையில் ‘‘சிறப்பு வழிகாட்டிகள்’’ வழங்கப்பட்டு வருகின்றன.

(v) நான்காம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

(vi) வேலைவாய்ப்பு பெறுவதற்கான வாழ்க்கை வழிகாட்டி நெறிமுறை பயிற்சி அளிக்கப்படுகின்றன.

(vii) ஆண்டுக்கு மூன்று முறை விடுதி மாணவ, மாணவியருக்கு மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

(viii) அரசு கட்டடங்களில் இயங்கும் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிக்கு இரண்டடுக்கு கட்டில்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ix) விடுதிகளுக்கு கணினி, குடிநீர் சுத்திகரிப்புக் கருவி, வண்ணத் தொலைக்காட்சி பெட்டி, அரவை இயந்திரம், மின் அரைப்பான், இட்லி வேகவைப்பான், விளையாட்டு சாமான்கள் மற்றும் நூலக புத்தகங்கள், தீயணைப்பான் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணவியர் விடுதிகளில் சுகாதார குட்டைத் தகளி அமைக்கப்பட்டுள்ளன.

(x) விடுதி மாணவ, மாணவியரின் நலனுக்காக போர்வைகள், ஜமக்காளங்கள், பாய்கள் வழங்கப்படுகின்றன.

(xi) ஒருவருக்கு ஒரு நாளைக்கு ஒன்று என்ற வீதத்தில் விடுதி மாணவ, மாணவியருக்கு

வாரத்திற்கு ஐந்து நாட்கள் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

(xii) ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

(xiii) விடுதிகளில் தங்கி 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

மேற்கண்ட விடுதிகளின் உணவு கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக 2019–2020 ஆம் ஆண்டில் ரூ. 306.75 இலட்சம் செலவிடப்படுகிறது.

இச்செலவினங்களுக்காக 2020–2021 ஆம் ஆண்டிற்கு ரூ. 479.81 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 23.3 கல்வி உதவித்தொகை

அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் ஜைன மதங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் மத்திய அரசின் கீழ்க்கண்ட கல்வி உதவித்தொகை திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

1. பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம்
2. பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம்
3. தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகை திட்டம்

இக்கல்வி உதவித்தொகைத் திட்டங்களால் ஒன்றாம் வகுப்பு முதல் தொழிற்கல்வி/ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர். இதற்கான நிதியை 100% மத்திய அரசு வழங்குகிறது. பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு, பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ. 1 இலட்சத்திற்கு மிகாமலும், பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்திற்கு ரூ. 2 இலட்சத்திற்கு மிகாமலும், தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை

திட்டத்திற்கு ரூ. 2.50 இலட்சத்திற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். முந்தைய ஆண்டின் இறுதித் தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்கும் மாணவ, மாணவியர் இத்திட்டங்களின் கீழ் பயன்பெறுவர். மொத்த ஒதுக்கீட்டில் 30 விழுக்காடு மாணவியருக்கென ஒதுக்கீடு செய்யப்படும். மேற்படி திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை நேரடி பயன்மாற்று முறையில் (DBT-Direct Benefit Transfer) மாணவ, மாணவியரின் வங்கி கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

### 23.3.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித்தொகை

இக்கல்வி உதவித்தொகை ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயில்பவர்களுக்கு ஆண்டொன்றுக்கு சேர்க்கை கட்டணம் ரூ. 500 வரையிலும், கற்பிப்புக் கட்டணம் ரூ. 3,500 வரையிலும் வழங்கப்படுகிறது. தவிர, பராமரிப்பு கட்டணமாக, 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு மாதம் ரூ. 100 வீதமும், 6ஆம் வகுப்பு முதல்

10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு மாதம் ரூ. 600 வீதமும், ஒரு கல்வி ஆண்டில் அதிகபட்சமாக 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 29.02.2020 வரை 3,61,992 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. 7,510.26 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**23.3.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித்தொகை**

இக்கல்வி உதவித் தொகை பதினோறாம் வகுப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பாடப்பிரிவிற்கு ஏற்றவாறு கல்வி உதவித்தொகையில் சேர்க்கை மற்றும் கற்பிப்புக் கட்டணத்திற்காக ரூ. 3,000 முதல் ரூ. 10,000 வரையிலும், பராமரிப்புக் கட்டணத்திற்காக விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ. 2,300 முதல் ரூ. 5,500 வரையிலும், விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ. 3,800 முதல் ரூ. 12,000 வரையிலும் ஒரு கல்வி ஆண்டிற்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 29.02.2020 வரை 40,357 மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. 2,387.15 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**23.3.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்தொகைத் திட்டம்**

தொழிற்கல்வி / தொழில்நுட்பக் கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியர் அதிக அளவில் மதிப்பெண்கள் பெற்று கல்வி பயிலுவதை ஊக்குவிக்கும் நோக்கில் இக்கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியருக்கு அதிகபட்சமாக ரூ. **20,000** வரை கல்வி கட்டணம் வழங்கப்படுகிறது. சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் அறிவிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பயில்பவர்களுக்கு மட்டும் எவ்வித வரம்பின்றி கல்வி கட்டணம் முழுவதும் மீள வழங்கப்படுகிறது. மேலும், பராமரிப்புக் கட்டணமாக ஆண்டொன்றுக்கு விடுதியில் தங்காமல் பயில்பவர்களுக்கு ரூ. **5,000** மற்றும் விடுதியில் தங்கி பயில்பவர்களுக்கு ரூ.**10,000** வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் **2019–2020** ஆம் ஆண்டில் **29.02.2020** வரை **2,697** மாணவ, மாணவியர் பயனடையும் வகையில் ரூ. **696.48** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**23.4. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்**

இஸ்லாமிய சமுதாயத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள, ஆதரவற்ற விதவைகள், மற்றும் வயதான பெண்களுக்கு உதவிடும் வகையில் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரை பதவி வழி தலைவராக கொண்டு மாவட்ட முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ. 20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஏழ்மை நிலையிலுள்ள, ஆதரவற்ற விதவைகள் மற்றும் வயதான முஸ்லிம் பெண்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், தையல், பூ–வேலைபாடுகள், காலணிகள், கைவினை பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது. இச்சங்கங்களுக்கு 2019–2020 ஆம் ஆண்டில் அரசின் இணை மானியமாக ரூ. 54.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**2020–2021** ஆம் ஆண்டிற்கு ரூ. **413.11** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23.5 உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்**

இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள், தர்காக்கள் மற்றும் அடக்கத்தலங்கள், தைக்காக்கள், ஆஷூர்கானாக்கள் மற்றும் முஸ்லீம் அனாதை இல்லங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்கள் பொருளாதாரம் மற்றும் கல்வி நிலைகளில் முன்னேற்றம் அடைவதற்காக உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நல உதவிகள் விவரம்:

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|
| I. | விபத்து ஈட்டுறுதி திட்டத்தின் கீழ்<br>1. விபத்தினால் மரணம் ஏற்பட்டால் | 1,00,000 |
| | 2. விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000 முதல் 1,00,000 வரை |
| II. | இயற்கை மரணம் | 20,000 |
| III. | ஈமச்சடங்கு செலவினம் | 5,000 |
| IV. | கல்வி உதவித்தொகை<br>1) 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,000 |
| | 2) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000 |
| | 3) 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,000 |
| | 4) 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | 1,500 |
| | 5) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | 1,500 |
| | 6) முறையான பட்டப்படிப்பு | 1,500 |
| | 7) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பு | 1,750 |
| | 8) முறையான பட்ட மேற்படிப்புக்கு | 4,000 |

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | உதவித் தொகை ரூ. |
|---|---|---|
| | 9) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | 5,000 |
| | 10) தொழிற்கல்வி பட்ட படிப்புக்கு | 4,000 |
| | 11) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பு | 6,000 |
| | 12) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | 6,000 |
| | 13) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு | 8,000 |
| | 14) ஐ.டி.ஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,000 |
| | 15) மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது பாலிடெக்னிக் படிப்பு | 1,200 |
| V. | திருமண உதவித்தொகை | 2,000 |
| VI. | மகப்பேறு உதவித்தொகை<br>அ. மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் (6 மாதங்களுக்கு) | 6,000 |
| | ஆ. கருச்சிதைவு/கருக்கலைப்பு | 3,000 |
| VII. | கண் கண்ணாடி செலவுத் தொகையை ஈடு செய்தல் | 500 (அதிகபட்சம்) |
| VIII. | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | 1,000 |

இவ்வாரியத்தில் இதுவரையில் 3,771 பயனாளிகளுக்கு ரூ. 139.15 இலட்சம் மதிப்பீட்டில் நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

**23.6 உலமாக்களுக்கு இரு சக்கர வாகனங்கள் வழங்குதல்**

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட 2,814 வக்ஃப் நிறுவனங்கள் தற்போது தமிழ்நாட்டில் உள்ளன. இந்த பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு புதிய இரு சக்கர வாகனங்கள் வாங்க 25,000 ரூபாய் அல்லது வாகனத்தின் விலையில் 50 சதவீதம் இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**23.7 ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி**

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினரும் இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு நிதியுதவி வழங்கும் திட்டம் 2011–2012 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு, ஒவ்வொரு புனிதப் பயணிக்கும் தலா ரூ. 20,000 வீதம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது. 2018–2019 ஆம் ஆண்டு முதல் புனிதப்பயணம் மேற்கொள்ளும் பயனாளிகள் எண்ணிக்கை 500–லிருந்து 600 ஆக உயர்த்தப்பட்டு, இவற்றில்

50 இடங்கள் கன்னியாஸ்திரிகள்/ அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரையில் ரூ. 825.60 இலட்சம் நிதியுதவி பெற்று 4,128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

இத்திட்டத்திற்கென 2020–2021 ஆம் ஆண்டில் ரூ. 120 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 23.8 கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்

தமிழ்நாட்டிலுள்ள கிறித்துவ மதத்தைச் சார்ந்த ஏழ்மை நிலையிலுள்ள, ஆதரவற்ற விதவைகள், வயதான பெண்கள் நலனுக்காக மாவட்ட ஆட்சியர் தலைமையில் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியம் இரு மடங்காக 1:2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ. 20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஏழ்மை நிலையிலுள்ள, ஆதரவற்ற விதவைகள், வயதான கிறித்துவ

பெண்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. தவிர தையல், பூ–வேலைபாடுகள், காலணிகள், கைவினை பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்பட்டு வருகிறது.

இச்சங்கங்களுக்கு விதை தொகையாக ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா ரூ. 1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டிற்கு ரூ. 297.54 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 23.9 கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம் அரசால் 2016–2017 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 18 கிறித்துவ தேவாலயங்களுக்கு ரூ. 44.62 இலட்சம் செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதல் பணிகளுக்காக

வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு **2020–2021** ஆம் ஆண்டில் ரூ. **1** கோடியிலிருந்து ரூ. **5** கோடியாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது.

**23.10 மறுவாழ்வு நிதி உதவி வழங்குதல்**

இனக்கலவரங்களால் பொருளாதார மற்றும் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் மற்றும் சிறு குற்றங்களுக்காக சிறைதண்டனை பெற்றவர்கள், சமுதாயத்தில் கண்ணியமான வாழ்க்கை நடத்திட உதவும் வகையில் சிறுவணிகம் தொடங்குவதற்கு நபர் ஒருவருக்கு ரூ. **10** ஆயிரம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

**23.11 பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம்)**

பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் திட்டம், சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை வழங்குவதையும் மற்றும் ஏற்ற தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத்

துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மத்திய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகள் என கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் தமிழ்நாட்டில், 4 வட்டாரங்களிலும் (Blocks) மற்றும் 18 நகரங்களிலும் (Towns) செயல்படுத்தப்பட உள்ளது. கூடலூர், மணல்மேல்குடி, திருவாடனை மற்றும் மண்டபம் ஆகியன வட்டாரங்களாகும். வேலூர், பேர்ணாம்பட்டு, மேல்விஷாரம், ஆம்பூர், வாணியம்பாடி, திண்டுக்கல், பள்ளப்பட்டி, நாகப்பட்டினம், கீழக்கரை, தூத்துக்குடி, காயல்பட்டிணம், கடையநல்லூர், தென்காசி, திருநெல்வேலி, கொல்லங்கோடு, நாகர்கோவில், குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகியன நகரங்களாகும்.

இத்திட்டம் மத்திய மற்றும் மாநில அரசுகளால் 60:40 என்ற நிதி பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 80 சதவீதம் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு

திட்டங்களுக்கும், அவற்றில் **33–40** சதவீதம் பெண்கள்/பெண் குழந்தைகளுக்காக கட்டமைப்புகள்/ வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்படும். இத்திட்டத்தின் கீழ் சமுதாய கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை (Smart class facility), அரசு தொழிற்பயிற்சி நிலையம்/தொழில்நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசுப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள், பலவகை தொழில்நுட்ப கல்லூரிகள் அமைத்தல், வேலைக்கு செல்லும் பெண்களுக்கான விடுதிகள் அமைத்தல், மத்திய மாநில அரசின் பல்கலைகழகங்களில் மாணவர் விடுதிகள் அமைத்தல் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன் கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் மத்திய அரசின் சிறுபான்மை நல அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை சிறுபான்மையினர் அதிகம் வாழும் இடங்களில் ஏற்படுத்தித் தரப்படும்.

**23.12 பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்**

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கீழ் நிர்ணயிக்கும் இலக்கில் உரிய பங்கு சிறுபான்மையினரின் மக்கட்தொகைக்கேற்ப, சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறுபான்மையின மக்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட சேவைகளின் பயன், வேலைவாய்ப்புகள், கல்வி உதவித்தொகை வழங்குதல், சுய வேலை வாய்ப்புத் திட்டம், தொழில் நுட்பப் பயிற்சிகள் மூலம் திறனை மேம்படுத்துதல், மாநில மற்றும் மைய அரசின் கீழ் வேலைவாய்ப்பு, சிறுபான்மையினர் வசிக்கும் குடிசைப் பகுதிகளின் நிலையை மேம்படச் செய்தல், இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு உதவி வழங்குதல், இனக்கலவரங்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் சீரிய நோக்கங்கள் ஆகும்.

இத்திட்டம் முறையாக செயலாக்கப்படுவதைக் கண்காணிக்க மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## 24. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்

தமிழ்நாட்டில் வாழும் மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையமானது சட்டபூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டத்தின்படி இயங்கி வருகிறது.

இந்த ஆணையம் சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மதநல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்தல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

தற்போதைய ஆணையம் **08.03.2019** முதல் **3** ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாணையம் ஒரு தலைவர், ஒரு துணைத் தலைவர் மற்றும் **8** உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது.

## 25. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் தமிழ்நாட்டில் வசிக்கும் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர்கள் பயன் பெறும் வகையில் இந்திய கம்பெனிகள் சட்டம் 1956—இன்படி அமைக்கப்பட்டது. சிறுபான்மையினர்களுக்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுதலுக்கான செயல்பாடுகளுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதே தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் குறிக்கோள் ஆகும். இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 5 கோடியாகும். இதன் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2.05 கோடியாகும். இந்நிறுவனம், புதுதில்லியில் உள்ள தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது. இக்கழகம் செயற்படுத்தும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்த கடனாகப் பெற்று வழங்குகிறது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி / கூட்டுறவு நகர

வங்கி / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

**25.1 தனிநபர் காலக்கடன் திட்டம்**

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில்/வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் பின்வருமாறு தனிநபர் காலக் கடன்கள் வழங்கப்படுகிறது.

| வ. எண். | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1. | **கடன் திட்டம் I** ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறகளுக்கு ரூ.1,20,000 |
| 2. | **கடன் திட்டம் II** ரூ.30 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண்– 8%<br>பெண்– 6% | கடன் திட்டம் –I இன் கீழ் பயன் பெற இயலாத ஆண்டு வருமானம் ரூ.6,00,000 வரை கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

தனிநபர் காலக் கடன் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்கும் மற்றும் ஆட்டோக்கள் வாங்குவதற்கும் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டங்களின் கீழ் **2019–2020** ஆம் ஆண்டில் **29.02.2020** வரை **1,437** பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ. **954.14** இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**25.2 சுய உதவி குழுக்கள் மூலம் சிறுகடன் திட்டம்**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம், சுய உதவி குழு உறுப்பினர்கள் (ஆண் மற்றும் பெண் சுய உதவிக் குழு உறுப்பினர்கள்) பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல் போன்ற சிறு வியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சுய உதவிக் குழுவில் உள்ள நபர்களுக்கு சிறுகடன் வழங்கும் திட்டம் மூலம் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண். | கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டொன்றுக்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | கடன் திட்டம் I<br>ரூ. 1 இலட்சம் வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ. 98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ. 1,20,000 |
| 2 | கடன் திட்டம் II<br>ரூ. 1.5 இலட்சம் வரை (சுய உதவிக்குழு உறுப்பினர் ஒருவருக்கு) | ஆண்களுக்கு 10%<br>பெண்களுக்கு 8% | கடன் திட்டம் I–இன் கீழ் பயன்பெற இயலாத ஆண்டு வருமானம் ரூ. 6,00,000 வரை உள்ளவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 29.02.2020 வரை சுய உதவிக் குழுக்கள் மூலம் 3,270 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ. 1,449.36 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 25.3 கல்விக் கடன்

அரசு / அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் இந்தியாவில் தொழிற் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு பின்வருமாறு கல்விக் கடன் வழங்கப்படுகின்றன.

| வ. எண். | கல்விக் கடன் தொகை | வட்டி விகிதம் (ஆண்டுக்கு) | பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | **கடன் திட்டம் I**<br>இந்தியாவில் கல்வி பயில கல்விக் கடன் ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ. 20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br>மேலும், வெளி நாடுகளில் தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ. 6 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ. 30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | 3% | கிராமப்புறங்களுக்கு ரூ. 98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ. 1,20,000 |

| | | | |
|---|---|---|---|
| 2 | **கடன் திட்டம் – II**<br><br>இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ. 4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ. 20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br><br>மேலும், வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ. 6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ. 30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | மாணவர்களுக்கு 8%<br><br>மாணவியர்களுக்கு 5% | கடன் திட்டம் –I இன் கீழ் நன்மைகளைப் பெற முடியாத நபர்கள் மற்றும் ரூ. 6,00,000 வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2019–20 ஆம் ஆண்டில் 29.02.2020 வரை 8 மாணவ, மாணவியருக்கு ரூ. 18.43 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 25.4 திறன் வளர்ப்பு பயிற்சி (Skill Development Training) "Kaushal Se Kushalta"

சிறுபான்மையின இளைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி

வழங்கப்படுகிறது. இப்பயிற்சிகளின் மூலம் சிறுபான்மையின இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு மற்றும் வெளி நிறுவனங்களில் பணிவாய்ப்புகள் பெற வாய்ப்புள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளது பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. **6,00,000** க்கு மிகாமல் இருத்தல் வேண்டும். தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் / தொடர்புடைய துறை திறன் கவுன்சில் / மாநில திறன் மேம்பாட்டுக் கழகம் / தொழில்நுட்ப கல்வி இயக்ககம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிலையங்கள் மூலமாக குறைந்தபட்சம் **200** மணி நேரம் முதல் **250** மணி நேரம் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிறுவனங்கள் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகத்தால் தேர்வு செய்யப்படும்.

இத்திட்டத்தின் கீழ் **2019–2020** ஆம் ஆண்டிற்கு ஸ்டிச்சர் கூட்ஸ் மற்றும் கார்மெண்ட்ஸ், பிரி அசெம்பிளி ஆப்ரேட்டர் மற்றும் எம்பிராய்டரி ஆகிய மூன்று வகையான பயிற்சிகளுக்கு ஆய்த்த ஆடை பயிற்சி மற்றும் வடிவமைப்பு (ATDC) மற்றும் மத்திய காலணி பயிற்சி நிலையம் (CFTI) ஆகிய இரண்டு பயிற்சி நிலையங்கள் மூலம் மொத்தம் ரூ. **32.92** இலட்சம் செலவில் **270** பயிற்சியாளர்களுக்கும் பயிற்சி அளிக்க தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக் கழகம் ஒப்புதல் அளிக்கப் பெற்று பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

## 26. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 1958 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 1995–ம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மைய அரசு சட்டம் 43/1995) 01.01.1996 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின்படி வக்ஃப் சொத்துக்களை சரியான முறையில் பராமரிப்பதற்காகவும், வக்ஃப் தொடர்பான அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் தமிழ்நாடு வக்ஃப் வாரியம் அமைக்கப்படுகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டில் 11 உறுப்பினர்களை கொண்டு தமிழ்நாடு வக்ஃப் வாரியம் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது வக்ஃப் சட்டம் 1995 பிரிவு 99–ன்படி வாரியம் கலைக்கப்பட்டு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஆறு மாத காலத்திற்கு தனி அலுவலரை அரசு நியமித்துள்ளது. தனி அலுவலரின் பதவிக் காலம் மேலும் ஆறு மாத காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் உள்ள வக்ஃப் சொத்துக்களை முழுமையாக அளவை செய்து கணக்கிடுவதற்கு நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர் தலைமையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**26.1 உலமா ஓய்வூதிய திட்டம்**

தமிழ்நாட்டிலுள்ள வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேஷ் இமாம், மோதினார், அரபி ஆசிரியர் மற்றும் முஜாவர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1981 ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உலமா ஓய்வூதியம் பெறுவதற்கு 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்கள் தகுதியுள்ளவர்களாவர். 2011–2012 ஆம் ஆண்டில் இத்திட்ட பயனாளிகள் எண்ணிக்கை 2,400–லிருந்து 2,600 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது உலமா ஓய்வூதியத்தினை மாதமொன்றுக்கு ரூ. 1,500–லிருந்து ரூ. 3,000 ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

**26.2 நிர்வாக மானியம்**

வக்ஃபு நிறுவனங்களிலிருந்து பெறப்படும் சகாயத் தொகை வருவாயிலிருந்து தமிழ்நாடு வக்ஃபு வாரிய நிர்வாகச் செலவுகளை எதிர்கொள்ள இயலாமல் பற்றாக்குறை ஏற்படுகிறது. தமிழக அரசு இப்பற்றாக்குறையை ஈடு செய்ய நிர்வாக மானியம் வழங்கி வருகிறது. தமிழக அரசு 2017–2018 ஆம் ஆண்டு முதல் நிர்வாக மானியத்தை

ரூ. 1 கோடியிலிருந்து ரூ. 2 கோடியாக உயர்த்தி வழங்கியது. மீண்டும் இந்நிர்வாக மானியம் தமிழக அரசால் 2019–2020 ஆண்டு முதல் ரூ. 2 கோடியிலிருந்து ரூ. 2.50 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. 2020–2021 ஆம் ஆண்டிற்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு நிர்வாக மானியமாக ரூ. 2.50 கோடியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

**26.3 பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியம்**

பள்ளிவாசல்கள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களை பழுது பார்ப்பதற்காகவும், புனரமைப்பதற்காகவும் தமிழ்நாடு அரசு பழுதுபார்ப்பு மற்றும் புனரமைப்பு மானியமாக ஆண்டுதோறும் ரூ. 60 இலட்சம் வழங்குகிறது. இத்திட்டத்திற்காக ஆண்டுதோறும் வழங்கப்படும் தொகை ரூ. 60 இலட்சத்திலிருந்து ரூ. 5 கோடியாக உயர்த்தி வழங்கப்பட உள்ளது.

**26.4 வக்ஃபு நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பு பணிகளுக்கான தொகுப்பு நிதி**

பள்ளி வாசல்கள், தர்க்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ. 3 கோடியில் ஒரு தொகுப்பு நிதி (Corpus fund) உருவாக்கப்பட்டுள்ளது.

**26.5 காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்**

தமிழ்நாட்டில் பணியாற்றும் மாவட்ட காஜிக்களுக்கு மாதந்தோறும் ரூ. 20,000 மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 2020–2021 ஆம் ஆண்டில் காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குவதற்காக ரூ. 67.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**26.6 மணவிலக்குப் பெற்ற முஸ்லிம் பெண்களுக்கான வாழ்க்கைச் செலவு மானியம்**

முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கில் உரிமை பாதுகாப்பு) சட்டம் 1986 பிரிவு 4(2)ன்படி, மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு நீதிமன்ற தீர்ப்புகளின்படி தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தால் வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

**26.7 தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம்**

வக்ஃப்கள் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம், வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 83–ன்படி ஏற்படுத்தப்பட்டு சென்னையில் 06.08.2018 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயத்தின் செயல்பாட்டிற்காக 2020–2021 ஆம் ஆண்டில் ரூ. 97.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 27. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

### 27.1 குழுவின் அமைப்பு

தமிழ்நாடு மாநில ஹஜ் குழு 1958 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. ஹஜ் குழு சட்டம், 2002 (மத்திய சட்டம் எண். 35/2002) இயற்றப்பட்ட பின்னர், ஹஜ் பயணம் சிறப்புடன் அமைய அதற்குத் தேவையான ஏற்பாடுகளை இந்திய ஹஜ் குழு மற்றும் புதுடெல்லி, சிறுபான்மையினர் விவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, மாநில அரசால் அமைக்கப்படுகிறது. தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, 12 உறுப்பினர்களை கொண்டு தமிழக அரசால் 2017 ஆம் ஆண்டு மூன்று ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டது.

### 27.2 குழுவின் பணிகள்

இக்குழுவின் முக்கியப் பணிகள் பின்வருமாறு:–

1. தமிழ் நாட்டைச் சேர்ந்த பயணிகளிடமிருந்து ஹஜ் பயணத்திற்கான விண்ணப்பங்களைப் பெறுதல், ஹஜ் பயணத்திற்கான நபர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.

2. இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய ஹஜ் முன்பணக் கட்டணம், மீதமுள்ள ஹஜ் தொகை, விமானக் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் குறித்த அறிவுரைகளை அவ்வப்போது பயணிகளுக்கு அளித்தல்.

3. ஜித்தாவிலுள்ள இந்திய உதவித் தூதரகத்தின் ஒருங்கிணைப்போடு மக்கா மற்றும் மதீனாவில் தகுந்த தங்குமிடங்களை தெரிவு செய்வதற்காக அலுவலர் ஒருவரை கட்டடத் தேர்வுக் குழுவில் சவூதி அரேபியாவிற்கு அனுப்புதல்.

4. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹாஜிகள் சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் காலத்தில், ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு ஹஜ் தொண்டர்களை அனுப்புதல்.

5. ஹஜ் பயணிகளுக்கு கடவுச் சீட்டுகளைப் பெறுவதற்காக மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்.

6. ஒவ்வொரு வருடமும் “ஹஜ்ஜும் உம்ராவும்” என்ற கையேட்டை தமிழில் அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு விலையேதுமின்றி வழங்குதல்.

7. சென்னை–ஜித்தா/மதீனா–சென்னைக்கு ஹஜ் விமானங்கள் இயக்கத்தின்போது வெளிமாவட்டப் பயணிகளுக்கு தற்காலிகத் தங்கும் வசதி ஏற்படுத்துதல் மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி அளித்தல்.

8. ஹஜ் பயணத்தின்போது பின்பற்ற வேண்டிய பயண நடைமுறை மற்றும் செயல்முறைகள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்ட பயணிகளுக்கு பயிற்றுவிக்க பல்வேறு மாவட்ட/தாலுக்கா தலைமையகங்களில் புத்தறிவுப் பயிற்சி முகாம்களை நடத்துதல்.

9. மூளைக்காய்ச்சல் தடுப்பூசி மற்றும் போலியோ சொட்டு மருந்தை ஹஜ் பயணிகளுக்கு அளிப்பதற்காக ஹஜ் பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப பல்வேறு மாவட்டங்களில் முகாம்கள் நடத்துதல்.

10. மக்கா மற்றும் மதீனா நகரங்களில் ஹஜ் பயணிகளுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்துதல்.

11. ஹஜ் விமானங்கள் இயக்கம் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் அமைய மத்திய அரசு, மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களான ஏர் இந்தியா, சவூதி அரேபிய

விமான நிறுவனம், இந்திய விமானங்களின் ஆணைக்குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் சேவைகளை ஒருங்கிணைத்தல்.

12. ஹஜ் குழுவின் மூலம் முதன்முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழக ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் மானியத்தொகை வழங்குதல்.

13. ஹஜ் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வு பணிகள்.

**27.3 ஹஜ் இல்லத்திற்கு கட்டடம் கட்டுதல்**

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாடு ஹஜ் குழுவின் மூலம் 4,000–க்கும் மேற்பட்ட பயணிகள் சென்னை விமான நிலையம் வழியாக ஹஜ் பயணம் மேற்கொள்கின்றனர். ஹஜ் பயணிகள் தங்களுடைய பயணத்திற்கு முன்பு தங்கி கடவுச் சீட்டு, பயண உடமைகள் சமர்ப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை சிரமமின்றி மேற்கொள்ள தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னையில் ஒதுக்கீடு செய்யும் நிலத்தில் ஒரு ஹஜ் இல்லம் கட்ட 15 கோடி ரூபாயினை அரசு ஒதுக்கீடு செய்து புதிய கட்டடம் கட்டப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 27.4 மாநில அரசால் தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு வழங்கப்படும் மானியங்கள்

### 27.4.1 தமிழக ஹஜ் பயணிகளுக்கு மானியம்

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழக ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்க தமிழ்நாடு ஹஜ் குழுவிற்கு ஆண்டுதோறும் ரூ. 6 கோடி ஒதுக்கீடு செய்யும் புதிய திட்டம் தமிழக அரசால் 2018–2019 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2019–2020 ஆம் ஆண்டில் 4,397 ஹஜ் பயணிகளுக்கு மானியம் வழங்கப்பட்டது.

2020–2021 ஆம் ஆண்டிற்கு ரூ. 6 கோடி இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 27.4.2 நிர்வாக மானியம்

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவிற்கு ஆண்டு நிர்வாக மானியத்தை தமிழக அரசு வழங்கி வருகிறது. நிர்வாக செலவினங்களை தமிழக அரசால் அளிக்கப்படும் மானியத்திலிருந்து தமிழ் நாடு மாநில ஹஜ் குழு

மேற்கொள்கிறது. **2018–2019** ஆம் ஆண்டு முதல், தமிழக அரசு இம்மானியத்தை ரூ. **30** இலட்சத்திலிருந்து, ரூ. **50** இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளது. **2020–2021** ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ. **50** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**27.4.3 ஹஜ் தொண்டர்கள் மற்றும் கட்டடத் தேர்வு குழுவில் உறுப்பினரை அனுப்புவதற்கு மானியத்தை ஒப்பளிப்பு செய்தல்**

ஹஜ் பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கும், கட்டடங்களைத் தெரிவு செய்ய கட்டடத் தேர்வுக் குழுவில் பிரதிநிதியை அனுப்புவதற்குண்டான செலவினத்தை மேற்கொள்ளவும், அரசு, தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியங்களை அளிக்கிறது. **2019–2020** ஆம் ஆண்டில் ஹஜ் பயணிகளுக்கு சேவை புரிவதற்காக **21** ஹஜ் தொண்டர்கள் சவூதி அரேபியாவிற்கு அனுப்பப்பட்டார்கள்.

இத்திட்டத்திற்காக **2020–2021** ஆம் ஆண்டிற்கு ரூ. **10.29** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரின் வாழ்க்கை முறையை மேம்படுத்தும் நோக்கத்துடன் இவ்வரசு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இம்மக்கள் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளில் முன்னேற்றம் அடைந்திட இவ்வரசு தொடர்ந்து பாடுபடும்.

**சீ. வளர்மதி**
பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
**சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர்**

## இணைப்பு–1


## 2020–2021 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தலைமைச் செயலகம் | 650.30 | --- | 30.00 | 680.30 |
| வக்ஃப் மற்றும் ஹஜ் குழு | 1354.29 | --- | --- | 1354.29 |
| பிற்படுத்தப்பட்டோர் நலன் | 44440.67 | 733.02 | --- | 45173.69 |
| மிகப்பிற்படுத்தப்–பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் | 50114.17 | 3566.48 | --- | 53680.65 |
| தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் | 89.87 | --- | --- | 89.87 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 62.07 | --- | --- | 62.07 |
| சிறுபான்மையினர் நலன் | 1934.53 | 329.00 | --- | 2263.53 |
| தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 97.15 | --- | --- | 97.15 |
| மொத்தம் | 98743.05 | 4628.50 | 30.00 | 103401.55 |


# இணைப்பு–2

## இட ஒதுக்கீடு விவரம்



# இணைப்பு–3

## மாவட்ட வாரியான விடுதிகள் விவரம் (1354)





மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **23.12.2019** அன்று மிதிவண்டிகள்
வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விலையில்லா சலவைப் பெட்டிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விலையில்லா தையல் இயந்திரங்களை
பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.




தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தால் வழங்கப்படும் பொதுகாலக் கடன் திட்டத்தின் கீழ் கடனுதவி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.